10th November 1965]

Project will be entrusted to a Limited Company in the public sector and the Government of India are taking steps to form a Limited Company under the Indian Companies' Act; and

(*b*) It is understood that the Australian Government would be assisting this Project with finance under the Colombo Plan for purchasing equipment. The factory will produce bread on sound and scientific lines and economically. The capacity of the plant may be 30,000 loaves of 1 lb. per day of 24 hours.

குடிநீர் வழங்குதல்

* **411 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** *கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

திண்டிவனம் வட்டத்திலுள்ள சாரம் கிராமத்தில் அரிஜன காலனிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

கனம் திரு. கோ. பூவராகன் : தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தைச் சேர்ந்த ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள சாரம் கிராமத்தில் ராட்டினக் கிணறு ஒன்று இருக்கிறது. இக் கிணற்றிலிருந்து ஹரிஜனங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும். மேற்சொன்ன கிணற்றிலிருந்து பரண் தொட்டி ஒன்றில் (over-head tank) நீரை நிரப்பிக்கொண்டு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதற்காக அத் தொட்டியைக் கட்டும் வேலை நடந்து வருகின்றது. இதன் கல் கட்டிட வேலைகளும் தொட்டியின் மேல் தளமும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. குழாய்களும் பொருத்தப் பட்டுவிட்டன. மோட்டார் பம்பு ஒன்று வாங்கி சீக்கிரம் தண்ணீர் வழங்குவதற்காக ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியனும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

திரு. ஆ. தங்கவேலு : *கனம் தலைவர் அவர்களே, இந்த சாரம் ஹரிஜனக் காலனிக்கு இந்தக் குடிநீர் திட்டத்திற்கு, இன்றைய கனம் முதல் அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் 5—7—1960-ல் கல்நாட்டு விழா செய்தார்கள். இப்பொழுது ஐந்தாண்டுக் காலமாக அதைச் செய்து முடிக்காததற்குக் காரணம் என்ன என்று அறிவிக்க முடியுமா ?*

கனம் திரு. கோ. பூவராகன் : இந்தக் குடிநீர் திட்ட வேலை பஞ்சாயத்திற்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்பட்டி ருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் நிதி வசதியைப் பொருத்திருக்கிறது. அரசாங்கத்தில் ஒன்றும் காலதாமதம் இருப்பதாகத் தெரியவில்லை.

Cultural Heritage of India

* 412 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to publish copies of mural paintings and proto-type of sculptures and architects of important temples in the State with a view to acquaint the people of the cultural heritage of India; and

(*b*) if so, the details thereof?